இந்திய வானிலை துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 16.09.2015

### மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 40°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 29°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 24°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது.

### வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (16.09.2015 முதல் 20.09.2015)

### 1. மேற்கு மண்டலம்

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூரில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-82 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- ✓ வரும் 5 நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதால் செப்டம்பர் 20 – 26ம் தேதிகளில் மானாவாரி விதைப்பிற்கு நிலங்களை தயார் செய்யவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலையை கருத்தில் கொண்டு மஞ்சள் பயிரின் இளம் கிழங்குகள் அழுகாமல் இருக்க வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் 5 தினங்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதால் சம்பா நெல் விதைப்பினை தொடரலாம்.
- ✓ காற்றின் வேகம் மணிக்கு 20 கிலோ மீட்டரை விட அதிகமாக இருப்பதால் கரும்பு மற்றும் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன்

காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37$^0$செ முதல் 38$^0$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 35 முதல் 78 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள குறுவை நெல்லினை அறுவடை செய்யவும்.
- ✓ பின் சம்பா பருவத்தில் நேரடி விதைப்பில் விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- ✓ சம்பா நடவு செய்யும் போது 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ ஜிங்க்சல்பேட், 30 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். சம்பா நடவிற்கு முன் ஒரு ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- ✓ பின் சம்பா, தாளடி பருவத்திற்கு ஆடுதுறை 38, ஆடுதுறை 46, ஆடுதுறை 49 வெள்ளை பொன்னி, திருச்சி 3, மற்றும் டிகேஎம் 13 இரகங்கள் சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப்படுகிறது.

**3. தெற்கு மண்டலம்**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24$^0$செ முதல் 26$^0$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 45 முதல் 88 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 11 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மானாவாரியில் பருத்தி மற்றும் சோளம் சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் வழக்கமாக பருவமழை தொடங்கும் சமயத்திற்கு 2 வாரங்களுக்கு முன்பு பருத்தி மற்றும் சோளத்தை முன்பருவ விதைப்பு செய்யவும். முன் பருவ விதைப்பு செய்வதால் தொடக்கத்தில் கிடைக்கும் மழையை திறம்பட பயன்படுத்திக்கொள்ள இயலும்.
- ✓ மானாவாரியில் முன்பருவ விதைப்பு செய்யப்படும் சோளத்தினை ஒரு எக்டருக்கு 22.5 கிலோ என்ற அளவில், முளைப்புத்திறனை மேம்படுத்த 2 சத பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து, முன்பு இருந்த ஈரப்பதத்திற்கு நிழலில் உலர்த்தி விதைகளை கடினப்படுத்தி விதைக்கவும். ஊறவைப்பதற்கு விதைகளின் கொள்ளளவிற்கு சரிசமமான அளவு கரைசலை பயன்படுத்தவும்.

- ✓ மானாவாரி சோளம் மற்றும் பருத்தியில் உரத்தேவையை குறைக்கும் விதத்தில் 3 பாக்கெட்டுகள் அசோஸ்பைரில்லம், 3 பாக்கெட்டுகள் பாஸ்போபாக்டீரியா அல்லது 6 பாக்கெட்டுகள் அசோபாஸ் உடன் விதைகளை விதைநேர்த்தி செய்து விதைக்கவும். விதை கடினப்படுத்துதல் மற்றும் பூச்சிக்கொல்லி விதைநேர்த்தி ஆகியவற்றை முடித்தபிறகு இறுதியாக உயிர் உர விதைநேர்த்தி செய்யப்பட வேண்டும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 88 முதல் 95 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 5 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு ஒரு சில இடங்களில் மிக இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ மிக இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால், பயிர்களுக்கு நீர்பாசன வசதி செய்ய வேண்டும்.
- ✓ காபி பயிருக்கு வரக்கூடிய மிதமான மழையை பயன்படுத்தி ஒரு ஏக்கருக்கு 35 கிலோ சூப்பர் பாஸ்பேட், 27 கிலோ பொட்டாஷ் உரத்தினை கலந்து இட வேண்டும்.

**5.வடமேற்கு மண்டலம்**

வரும் 5 நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 44 முதல் 65 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த 5 நாட்களுக்கு வட மேற்கு மாவட்ட வானிலையில மழைக்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகிறது. வெப்பம் சற்றே உயர்ந்து காணப்படும் என்பதால், எதிர்பார்த்ததைப்போலவே இரண்டாம் கோடையைப் போன்றே தட்பவெப்பநிலை காணப்படும். இதனால் கோழிகளில் மதிய நேரங்களில் இலேசான வெப்ப அயற்சி இருக்க வாய்ப்புள்ளது.
- ✓ நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விதைப்பு செய்த 40-45வது நாளில் ஏக்கருக்கு 160கிலோ ஜிப்சம் இட்டு, களை எடுத்து செடிக்குச் செடி மண் அணைப்பதனால் திறட்சியான தரமான காய்களைப் பெறலாம்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 28°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 50 முதல் 82 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 7 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழைக்காலம் துவங்குவதற்கு முன்பாக மாடுகளுக்கு சப்பை நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி ளேிக்க வேண்டும். கன்றுகள் செம்மறி மற்றும் வெள்ளாடுகளுக்கு சரியான குடற்புழு நீக்க மருந்து அளித்து குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.
- ✓ உழவர்கள் தங்கள் கால்நடைகளை ஏரி அல்லது குளத்தின் அருகில் புற்களை மேயவிடாமல் பாாத்துக்கொள்வதன் மூலம் தட்டைப்பழுக்களின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
- ✓ அதிக ஈரப்பதமும் வெப்பமும் ஒட்டுண்ணிகள் மற்றும் ஈக்களின் பெருக்கத்தை அதிகப்படுத்தும். எனவே உழவர்கள் முறையாக கொட்டைகையை சுத்தம் செய்து கால்நடைகளின் சாணத்தை மூடி எருக்குரியில் சேரிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் ஒட்டுண்ணிகளால் நோய் பரவுவதை கட்டுப்படுத்தலாம்.
- ✓ தற்போது நிலவும் வானிலையால் வெண்டை செடியில் வெள்ளை ஈ தாக்குதல் காணப்பட்டால் ஒரு எக்டருக்கு மீத்தேன் டெமட்டான் 2 மிலி அல்லது டைமித்தியேட் 2 மிலி என்ற பூச்சிக்கொல்லி மருந்தினை கலந்து தெளிக்க வேண்டும்.
- ✓ மிளகாய் செடியில் காய் துளைக்கும் வண்டுகளை கட்டுப்படுத்த இனகவர்ச்சி பொறிகளை ஒரு எக்டருக்கு 5 என்ற அளவில் வைக்க வேண்டும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிது. பகல்நேர வெப்பநிலை 29 - 31$^0$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23-24$^0$செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 89 முதல் 94 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அறுவடைச் செய்யப்பட்ட வாழைத்தார்களை உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும் இதனால் மழையினால் ஏற்படும் நோய்களை தடுக்கலாம்
- ✓ அன்னாசி காய் காய்க்கும் பருவத்தில் மழை நீர் தேங்காமல் இருக்க வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- ✓ புது துளிர் மற்றும் பூக்கும் பருவத்திலுள்ள ரப்பர் மரத்தில் பாலித்தீன் ரைன்கார்ட் -ஐ மரத்தில் பால் வடியும் பகுதியின் மேல் பொருத்தவும். இதனால் மழைக் காலங்களிலும் பால் வெட்டலாம்.
- ✓ மிளகு, கிராம்பு, ஜாதிக்காய் மற்றும் இலவங்கப்பட்டை செடி, மரங்களில் மழை நீர் சேகரிக்க

ஏதுவாக பாத்திகள் அமைக்கவேண்டும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**கோவை - 3**